**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. புருஷோத்தம்மன் | அசல் வழக்கு எண். | 109/2015 |
| த/பெ. | - | சீனுவாசன் | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

16.04.2026

**5 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான், 2ம் வாதி, அனைத்து பிரதிவாதிகளும் புதுச்சேரி மாநிலத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி உயிருடன் இருந்த காலத்திலும் புதுச்சேரி மாநிலத்தில் தான் குடியிருந்தார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் தகப்பனரான வீரப்பமுதலியாரும் புதுச்சேரியை சேர்ந்தவர் என்றால் சரிதான். மேற்படி வீரப்பமுதலியாரின் மனைவியும் புதுச்சேரியை சேர்ந்தவர் என்றால் எனக்கு தெரியாது. வீரப்ப முதலியார் புதுச்சேரியில் எங்கு குடியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. வீரப்ப முதலியாரை எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் வீரப்ப முதலியாருக்கு எவ்வாறு கிடைத்தது என்று எனக்கு தெரியாது என்றால் சுயமாக சம்பாதித்த சொத்து என்று ஆவணங்கள் மூலம் தெரிந்து கொண்டேன், ஆனால் நேரடியாக தெரிாயது. வீரப்ப முதலியாரின் அசல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வீரப்ப முதலியாரின் அசல் ஆவணங்கள் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. வழக்கு தாக்கல் செய்தபோது வீரப்ப முதலியாரின் ஆவணங்ககளின் ஜெராக்ஸை தான் தாக்கல் செய்தேன் என்றும் சான்றிட்ட நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வீரப்ப முதலியாருக்கு கிரையம் வாங்கிய சொத்துக்களை தவிற வேறு பூர்வீக சொத்துக்கள் கிடையாது என்றால் எனக்கு தெரியாது. பூர்வீக சொத்து பற்றி தெரியாததால் தான் அது பற்றி வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வீரப்ப முதலியார் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. வீரப்ப முதலியாரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வீரப்ப முதலியாருக்கு பெண் வாரிசுகள் உண்டா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வீரப்ப முதலியாருக்கு பெண் வாரிசுகள் உண்டா என்பது குறித்து நான் ஆவண பரிசோதனை எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். வீரப்ப முதலியார் எந்த தேதியில் இறந்தார் என்று வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. வீரப்ப முதலியாருக்கு சீனுவாசன், வாசுதேவன் மற்றும் சுப்புராயன் என்ற மூன்று மகன்கள் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் வாசுதேவ முதலியாரை தெரியும் சீனுசாவன் மற்றும் சுப்புராயனை தெரியாது. சீனுவாசன் மற்றும் சுப்புராயன் அவர்களது சொத்துக்களை எப்படி அனுபவித்து வந்தனர் என்று என்னால் கூற இயலாது என்றால் சரிதான். வீரப்ப முதலியார் இறந்த பின்பு அவரது வாரிசுகள் அவர்களது சொத்துக்களை எப்படி அனுபவம் செய்து வந்தனர் என்றால் கூட்டு குடும்பமாக அனுபவம் செய்து வந்தனர். சீனுவாச செங்குந்தர் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. சீனுவாச செங்குந்தர் என்பவரை நான் நேரடியாக

பார்த்ததில்லை. அவர் எப்போது இறந்தார் என்று என்னால் கூற இயலாது. சீனுவாசன் என்பவரின் மனைவி பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது, அவர் உயிருடன் உள்ளாரா என்று எனக்கு தெரியாது. சீனுவாசன் என்பவரையும் அவரது மனைவியையும் எனக்கு தெரியாததால் அவர்களுக்கு எத்தனை வாரிசுகள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, இரண்டு ஆண் பிள்ளைகள், ஒருவர் பெயர் சிங்கார வேலு முதலியார் மற்றொருவர் பெயர் ரத்தினவேல் முதலியார்.

4. சீனுவாசன் என்பவருக்கு பெண் வாரிசுகள் உண்டா என்றால் எனக்கு தெரியாது. அது குறித்து நாளது தேதி வரை நான் யாரிடமும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சீனுவாச முதலியாருக்கு பெண் வாரிசுகள் உண்டா என்று எனக்கு தெரியாததால் ஆண் வாரிசுகள் மட்டுமே வாரிசுகள் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். சீனுவாசன் இறந்த பின்பு அவரது குடும்பத்தினர் தனியாக வசித்து வந்தனரா அல்லது வாசுதேவன் மற்றும் சுப்புராயன் குடும்பத்தினருடன் சேர்ந்து வசித்து வந்தனரா என்றால் என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல, கூட்டு குடும்பமாக புதுச்சேரி மாநிலம் மேட்டுபாளையத்தில் வசித்து வந்தனர்.

5. வழக்கு சொத்து தமிழ்நாடு, வானூர் வட்டத்தில் உள்ளது என்றும் புதுச்சேரியில் இல்லை என்றால் சரிதான். சீனுவாசனின் வாரிசுகள் எந்த ஊரில் உள்ளனர் என்றால் புதுச்சேரி மேட்டுபாளையத்தில் உள்ளனர். அவர்கள் தமிழ்நாடு பூத்துறை கிராமத்தில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். வீரப்பமுதலியார் மற்றும் அவரது குடும்பத்தை பற்றிய விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2005 ல் தெரிய வந்தது. 2005 ஆம் ஆண்டிற்கு முன்பு வீரப்ப முதலியார்

சொத்துக்களை எவ்வாறு அனுபவித்து வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, கூட்டு குடும்பமாக அனுபவித்து வந்தார். 2005 ஆம் ஆண்டு வரை கூட்டு குடும்பமாக அனுபவித்து வந்ததாக எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வீரப்ப முதலியார் கூட்டு குடும்பமாக அனுபவித்து வந்தற்கான அடங்கல், கூட்டு பட்டா போன்ற ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் கூட்டு பட்டாவை பார்த்துள்ளேன். கூட்டு பட்டா எண் என்னவென்றால் எனக்கு ஞாபகமில்லை. கூட்டு பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு நினைவில்லை.

6. வீரப்ப முதலியாரின் குடும்ப சொத்துக்கள் குறித்து 1995 ம் ஆண்டில் பாக பிரித்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1995 ம் ஆண்டு பாக பத்திரத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, படித்து பார்த்துள்ளேன். மேற்படி பாக பத்திரம் யார் யாருக்கு இடையே ஏற்பட்டது என்றால் வாசுதேவ முதலியார், சீனுவாச முதலியாரின் குமாரர்கள் மற்றும் சுப்புராய முதலியார். 1995 ம் ஆண்டு அசல் பாக பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த பாக பத்திரத்தில் எத்தனை அட்டவணை சொத்துக்கள் உள்ளது என்றால் நான்கு. பாக பத்திரத்தில் வாசுதேவ முதலியாருக்கு 78 1/2 சென்ட், சுப்புராய முதலியாருக்கு 78 1/2 சென்ட், சீனுவாச முதலியாரின் இரண்டு குமாரர்களுக்கு தலா 40 சென்ட் ஒதுக்கப்பட்டது. சீனுவாச முதலியாருக்கு மட்டும் அதிகம் கொடுத்தது பற்றி என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். அந்த பாக பத்திரம் தான் வா.சா.ஆ.1 ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில்

குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் வீரப்ப முதலியாரின் குடும்பத்திற்கு எப்படி கிடைத்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வீரப்ப முதலியாரின் தனிப்பட்ட கிரைய பத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் வீரப்ப முதலியாரின் கிரைய பத்திரம் பற்றி வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாசுதேவ முதலியாருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் நான்கு ஆண் வாரிசுகள் அவர்கள் பெயர்கள் அருணகிரி, திருஞானம், அருணாச்சலம் மற்றும் சண்முகம் ஆகும். வாசுதேவன் என்பவருக்கு பெண் வாரிசுகள் அவர்கள் பெயர் சரஸ்வதி மற்றும் புஷ்பா உள்ளனர் என்றால் எனக்கு தெரியாது, பெண் வாரிசுகள் இருப்பதாக 4 முதல் 6 பிரதிவாதிகள் என்னிடம் சொல்லவில்லை.

8. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வாசுதேவன் என்பவருக்கு சரஸ்வதி மற்றும் புஷ்பா என இரண்டு பெண் வாரிசுகள் இருப்பதாக சொல்லியுள்ளனர் என்றால் சரிதான். மேற்படி இரண்டு பெண் வாரிசுகளை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பும் வாசுதேவனின் பெண் வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கு நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். பெண் வாரிசுகளை பற்றி விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அந்த விசாரணையில் பெண் வாரிசுகள் உள்ளதாக தெரிந்து கொண்டேன். (**தற்போது சாட்சி மாற்றி விசாரிக்கவில்லை என்று சாட்சியமளித்தார்**) உண்மையான பொருண்மைகளை சொல்லி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால்

சரியல்ல. வாசுதேவனின் பெண் வாரிசுகளை வழக்கில் சேர்த்தால் தான் இந்த வழக்கில் நான் முழுமையான பரிகாரம் கோர முடியும் என்றால் சரியல்ல.

9. வீரப்ப முதலியார் மற்றும் அவரது குமார்கள் புதுச்சேரியின் பிரன்ச் குடிமக்கள் என்றால் சரியல்ல. நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வீரப்ப முதலியார் மற்றும் அவரது குமார்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவை புதுச்சேரி மாநிலத்தில் தான் இருந்தது என்றால் சரிதான். புதுச்சேரி குடிமக்களுக்கு புதுச்சேரி வாரிசு உரிமை சட்டம் தான் பொருந்தும் என்றால் சரிதான். (**தற்போது சாட்சி மாற்றி சட்டம் பற்றி தெரியாது என்று சொன்னார்**) . எதிர்வழக்குரையில் வீரப்ப முதலியாரின் வாரிசுகளுக்கு பிரன்ச் சட்டம் தான் பொருந்தும் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதற்கு நான் ஆட்சேபனை தெரிவித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் முன்கிரையதாரர்களான 4 முதல் 6 பிரதிவாதிகள் கிரையம் கொடுத்த போது அவர்களது தகப்பனார் உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் இருந்தார்.

10. பிரன்ச் சட்டத்தின் படி வீரப்ப முதலியார் உயிருடன் இருக்கும் வரை அவரது வாரிசுகளுக்கு குடும்ப சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல, வாய்மொழி பாக பிரிவினை செய்து கொண்டனர். என் கிரைய ஆவணங்களான வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்ட பின்பும் அது குறித்து என் பிரமாண பத்திரிக்கையில் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. வாசுதேவ முதலியாரின் பெண் வாரிசுகள் உயிருடன் இருப்பதால் அவர்களுக்கும் வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

11. வழக்கு சொத்து 1/7 பாகம் வாசுதேவ முதலியாரின் பெண் வாரிசுகளுக்கு உள்ளது என்றால் சரியல்ல. நான் 2005 மற்றும் 2007 ஆண்டுகளில் கிரையம் வாங்குவதற்கு முன்பு வழக்கு சொத்திற்கு வில்லங்கம் பார்த்தேனா என்றால் இல்லை. கிரையம் வாங்குவதற்கு முன்பே வழக்கு சொத்துக்கள் குறித்து வழக்கு சொத்துள்ள கிராமத்தில் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வழக்கு சொத்துள்ள கிராமத்தில் விசாரித்தேன் என்றும் அதனை நம்பி கிரையம் வாங்கினேன் என்று குறிப்பிட்டு என் வழக்குரை மற்றும் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. 11.02.2005 ம் தேதியில் வழக்கு சொத்தின் மீது வில்லங்கம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அது என்ன வில்லங்கம் என்றால் வாசுதேவ முதலியார் 5 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம். அந்த பத்திரம் தான் வா.சா.ஆ. 2 என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் நான் கிரையம் வாங்கிய பின்பு படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

12. வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்படி தானத்தை ரத்து செய்வதற்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் எந்த நிபந்தனையும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் சட்டப்படி செல்லும் என்றும் அதனை ரத்து செய்வதற்கு சட்டத்தில் இடமில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய பின்பு வா.சா.ஆ.2 ஆவணத்தை தெரிய வந்ததின் காரணமாக அது குறித்து சட்ட நடவடிக்கை

எடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தை பற்றி சட்ட வல்லுநர்களின் கருத்துறை கேட்டேனா என்றால் கேட்டேன். வா.சா.ஆ.2 ஆவணத்தை மறைத்து எனக்கு கிரையம் கொடுத்தற்காக 5ம் பிரதிவாதியின் மீது ஏன் நடவடிக்கை எடுக்க கூடாது என்று 5ம் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை.

13. வழக்கு தாக்கல் செய்தபோது 4 முதல் 7 பிரதிவாதிகளை ஏன் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை, 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிவிட்டதால் அவர் மீது வழக்கு தாக்கல் செய்தேன். என் கிரைய பத்திரமான வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களில் வாய்மொழி பாகம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

5ம் பிரதிவாதி தரப்பின் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the presence of the witness read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif
Vanur.